செ.வெ.எண்: 645 நாள்: 29.09.2019

# விவசாயிகள் மற்றும் மீன்வளர்ப்போர் தரமான "கிப்ட் திலேப்பியா" இன மீன்குஞ்சுகளை மீன்வளர்ப்பில் பயன்படுத்த வேண்டும்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

விவசாயிகள் மற்றும் மீன்வளர்ப்போர் தரமான "கிப்ட் திலேப்பியா" இன மீன்குஞ்சுகளை மீன்வளர்ப்பில் பயன்படுத்த வேண்டும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

கிப்ட் திலேப்பியா என்றழைக்கப்படும் மரபு வழி மேம்படுத்தப்பட்ட பண்ணைத் திலேப்பியா மீன்கள் அதிக அளவில் புரதங்களும், உடலுக்கு நன்மைத் தரக்கூடிய அபரிமிதமான விட்டமின் சத்துக்களும் நிறைந்த மீனினமாகும். குறுகிய காலத்தில வேகமாக வளரும் இம்மீன்கள் அனைத்து வகையான நீரின் தன்மை மற்றும் தட்பவெப்ப நிலையில் வளருவதுடன் மிகுந்த நோய் எதிர்ப்பு சக்தி திறன் கொண்டவை.

மேலும் இம்மீனினத்தில் மீன்குஞ்சுகள் அனைத்தும் வேகமாக வளரக்கூடிய ஆண் மீன்களாக இருக்கும் வகையில் விற்பனை செய்யப்படுவதால், இனப்பெருக்கம் செய்வது தவிர்க்கப்பட்டு, இம்மீனினம் உண்ணும் உணவுகள் அனைத்தும் உடல் வளர்ச்சிக்கும் பயன்பட்டு விரைவில் வளர்ச்சி அடைந்து விடுவதுடன் நோய் எதிர்ப்பு திறன் காரணமாக இம்மீன்களின் பிழைப்பு விகிதம் அதிகமாக உள்ளது. இவ்வாறாக விரைவில் வளரும் தன்மையுள்ளதாலும், மீன்வளர்ப்புச் செய்வோருக்கு குறுகிய காலத்தில் அதிக இலாபம் மற்றும் வருவாயை ஈட்டித் தரக்கூடிய மீனினமாகவும் திகழ்கிறது.

மேற்காண்டவாறு மீன்வளர்ப்பு செய்து கூடுதல் இலாபம் பெற்றிட ”கிப்ட் திலேப்பியா” மீன்குஞ்சுகள் தரமான மற்றும் கலப்பற்ற மீன்குஞ்சுகளாக இருப்பது அவசியமாகும், அத்தகைய தரமான மீன்குஞ்சுகள் தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி அரசு மீன்குஞ்சு உற்பத்தி பண்ணையிலும், மதுரையில் இயங்கி வரும் அரசு அனுமதி பெற்ற தனியார் மீன்குஞ்சு

பண்ணையில் மட்டுமே கிடைக்கும். இவ்விரு பண்ணைகள் தவிர பிற இடங்களில் பெறப்படும் GIFT குஞ்சுகள் விரைவில் இனப்பெருக்கம் செய்வதுடன் வளர்ச்சி மிகவும் குறைந்து காணப்படும்.

மேலும் ஏற்கனவே கிப்ட் திலேப்பியா மீன்வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களது பண்ணை அல்லது குட்டைகளை மீன்வளத்துறையில் பதிவு செய்வது அவசியமாகும். எனவே, கிப்ட் திலேப்பியா, மீன்வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் மீன்வள உதவி இயக்குநர் அலுலகம், எண் 1, லெட்சுமிபுரம் முதல் வீதி, புதுக்கோட்டை 1, தொலைபேசி எண் 04322 220069 என்ற முகவரியில் நேரிலோ அல்லது தொலைபேசியிலோ விவரம் தெரிவித்து குளத்தை அவசியம் பதிவு செய்திடவும், விவசாயிகள் மற்றும் மீன்வளர்ப்போர் தரமான கிப்ட் திலேப்பியா இன மீன்குஞ்சுகளைப் பெறவும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**